**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.78/2015**

**வழக்கு சாட்சி: PW.13**

**தேதி: 01.08.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **திருமதி.ராதா** | **ஜாதி:** | **அகமுடையார்** |
| **தந்தை பெயர் :** | **முத்துராக்கு** | **தொழில்:** | **தலைமைக் காவலர்** |
| **கிராமம்:** | **கீழக்கண்டனி** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **சிவகங்கை** | **வயது:** | **37/2023** |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் சிவகங்கை நகர் போக்குவரத்து காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 07.01.2015ம் தேதி மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வந்தேன். அன்றைய தேதியில் சிப்காட் காவல் நிலைய குற்ற எண்3/2015 பிரிவுகள் 294(பி), 302, 506(2) இதச வழக்கில் கொலையுண்டு இறந்து போன வேலூர் ஒத்த வீட்டைச் சேர்ந்த அழகு மனைவி திருமதி ஆறுமுகம் என்பவரின் பிரேதத்தின் மீது மானாமதுரை அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் மானாமதுரை அனைத்தும மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் திருமதி. சாந்தி பாலாஜி என்பவர் அன்று காலை 07.00 மணி முதல் 09.00 மணி பிரேத விசாரணை மேற்கொண்டதற்கு நான் உதவியாக இருந்தும், பிரேத விசாரணை முடிந்தவுடன் பிரேத பரிசோதனை செய்வதற்காக ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தினை மானாமதுரை அரசு மருத்துவமனை மருத்துவரிடம் கொடுத்தும் மருத்துவருக்கு இறந்து போன ஆறுமுகத்தின் பிரேதத்தை அடையாளம் காட்டியும் பிரேத பரிசோதனையின் போது உடனிருந்தும் பிரேத பரிசோதனை முடிந்த உடன் ஆறுமுகத்தின் மகன் இருளப்பன் அவர்களிடம் ஆறுமுகத்தின் பிரேதத்தை நல்லடக்கம் செய்ய ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாாள் என்னை விசாரிக்க நான் நடந்த விபரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

இந்த குற்ற வழக்கு சம்பந்தப்பட்ட அனைத்தும் சிப்காட் காவல் நிலைய ஆளுகை வரம்பிற்குட்பட்டவை என்றால் சரிதான். அன்றைய தினம் நான் பணிபுரிந்தது மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையம் என்றால் சரிதான். நான் அன்றைய தினம் மேற்கொண்ட பணிகள் அனைத்தும் சிப்காட் காவல் நிலையத்திற்குட்பட்ட பணிகள் என்றால் சரிதான். இதுபோன்ற முக்கிய வழக்குகளில் வேறு காவல் நிலைய பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டால் தனி உத்தரவு பெற்று தான் பணியாற்ற வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு உத்தரவு எனக்கு பிறப்பிக்கப்பட்டதா என்றால் கடவுச்சீட்டு மட்டும் வழங்கப்பட்டது. எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டை நான் ஆய்வாளரிடமோ நீதிமன்றத்திலோ ஒப்படைத்தேனா என்றால் நிலைய எழுத்தரிடம் ஒப்படைத்தேன். அன்றைய தினம் மொத்தம் மேற்படி குற்ற வழக்கில் மொத்தம் 3 பிரேதத்தின் மீது நடைபெற்ற பிரேத விசாரணையின் போது காலை 07.00 மணி முதல் 09.00 மணி வரை நான் உடனிருந்தேன் என்ற நிலையில் திருமதி.ஆறுமுகத்தின் பிரேதத்தின் மீது சரியாக எத்தனை மணிக்கு பிரேத விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்றால் எனக்கு தற்போது சரியாக ஞாபகமில்லை. அந்த பிரேத விசாரணையில் கலந்து கொண்ட பஞ்சாயத்தார்களின் பெயர்கள் தற்போது எனக்கு சரியாக ஞாபகமில்லை. தொடர்ச்சியாக 3 பிரேதங்களின் மீது பிரேத விசாரணைகள் நடைபெற்ற நிலையில் எந்தெந்த பிரேதங்களுக்கு அடுத்து எந்த பிரேதங்களுக்கு பிரேத விசாரணை நடைபெற்றது என்று தற்போது எனக்கு ஞாபகமில்லை. திருமதி.ஆறுமுகத்தின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்யக் கோரிய வேண்டுகோள் கடிதத்தை ஆய்வாளர் சிப்காட் காவல் நிலையத்தில் வைத்து எனக்கு கொடுத்தார். நான் சொன்ன மாதிரி பிரேத விசாரணையில் நான் கலந்து கொள்ளவில்லை என்றும் இந்த வழக்கின் முதல் புலன் ஆய்வு அதிகாரி நான் பணிபுரிந்த காவல் நிலையத்தின் அதிகாரியாக இருந்ததால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் பிரேத விசாரணையில் நான் கலந்து கொள்ளவில்லை என்றாலும் ஆறுமுகம் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்கு மருத்துவரிடம் நான் வேண்டுகோள் கடிதத்தை கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.78/2015**

**வழக்கு சாட்சி: PW.14**

**தேதி: 01.08.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **பன்னீர் செல்வம்** | **ஜாதி:** | **அகமுடையார்** |
| **தந்தை பெயர் :** | **சூரியநாராயணன்** | **தொழில்:** | **சிறப்பு சார்பு ஆய்வாளர் (ஓய்வு)** |
| **கிராமம்:** | **கீழச்செவல்பட்டி** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **திருப்பத்தூர்** | **வயது:** | **66/2023** |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் காவல் துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வுப் பெற்று கீழச்செவல்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 06.01.2015ம் தேதி மானாமதுரை சிப்காட் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தேன். அன்றைய தினம் இரவு 11.00 மணிக்கு நான் நிலையப் பொறுப்பிலிருந்த போது வேலூர் கிராமத்தைச் சேர்ந்த வீராச்சாமி என்பவர் நிலையத்தில் ஆஜராகி புகார் மனு கொடுத்தார். நான் அந்த புகார் மனுவைப் பெற்று சிப்காட் காவல் நிலையக் குற்ற எண்.3/2015 பிரிவுகள் 294(பி), 302, 506(2) இதச வழக்காக பதிவு செய்து வாதியின் புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் கனம் நீதித்துறை நடுவர் மானாமதுரை அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பியும் ஒரு நகலை வாதிக்கும் கொடுத்து நான் நிலையத்தில் இரவு 11.40 மணிக்கு இருந்த போது ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு வந்தார். அவரிடம் முதல் தகவல் அறிக்கையை நேரடியாக மேல் விசாரணைக்காக கொடுத்தேன். ஆய்வாளருடன் நான் சம்பவயிடத்திற்கு உடனடியாக சென்று அங்கு இறந்து கிடந்த ராஜேஸ்வரி, தனபாக்கியம், ஆறுமுகம் ஆகியோர்களின் பிரேதத்தை ஆம்புலன்சில் ஏற்றி மானாமதுரை அரசு மருத்துவமனைக்கு வந்து பிரேத பரிசோதனைக்காக சவக்கிடங்கில் வைத்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு தான் புகார்தாரர் வீராச்சாமி நிலையத்தில் ஆஜராகி என்னிடம் கொடுத்ததாகும். அந்த புகார் மனு ஏற்கனவே அ.த.சா.ஆ.1

ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த புகார் மனுவின் மீது நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னீடு நான் ஆய்வாளரின் புலன் விசாரணைக்கு உதவியாக இருந்து ஆய்வாளர் கேட்க நடந்த விபரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

சம்பவயிடமானது சிப்காட் காவல் நிலையத்திலிருந்து வடமேற்காக சுமார் 12 கி.மீ தூரம் இருக்கும். அ.த.சா.ஆ.10ல் சம்பவயிடம் நிலையத்திலிருந்து வடமேற்காக 10 கி.மீ தூரத்தில் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து நிலையம் வர அதிகபட்சம் 30 நிமிடங்கள் ஆகும் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்று 3 மணிநேரம் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் யார் எழுதியது என புகாரில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் அவர் வரும் போதே எழுதிக் கொண்டு வந்தார். புகாரில் உள்ள எழுத்துக்களும் கையெழுத்து எழுத்தும் வேறுவேறாக உள்ளதா என்றால் சரியல்ல. புகாரில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பமும் புகார்தாரரின் கையொப்பமும் ஒரே மாதிரியாக உள்ளது என்றால் சரியல்ல வேறுவேறாக உள்ளது. ஆய்வாளர் என்னை 07.01.2015 அன்று விசாரித்தார். அவ்வாறு ஆய்வாளர் என்னை விசாரணை செய்யும் போது நேற்று 07.01.2015ம் தேதி 23.00 மணிக்கு நான் நிலையத்தில் இருந்த போது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தேதி தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது. தேதி தவறாக தட்டச்சு செய்யப்பட்ட விபரத்தை நான் என்னுடைய மறு வாக்குமூலம் எதிலும் சொல்லவில்லை. என்னை ஆய்வாளர் விசாரணை செய்யும் போது முதல் தகவல் அறிக்கையின் அசலையும் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர், மானாமதுரை அவர்களுக்கும் ஒரு நகலை வாதிக்கும் பிற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து தகவலின் பேரில் 23.40 மணிக்கு நிலையம் வந்த தங்களுக்கு வழக்கின் புலன் விசாரணைக்காக ஒரு நகலை வழங்கியும் பின்னர் புலன் விசாரணைக்கு உதவியாக இருந்தேன் என்று என்னை ஆய்வாளர் விசாரணை செய்யும் போது நான் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். 23.40 மணிக்குள்ளாக நான் முதல் தகவல் அறிக்கையை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டேன் என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்திலிருந்து நீதித்துறை நடுவர் நீதிமன்றமும் நீதிபதி குடியிருப்பும் ஒரே ரோட்டில் 2 கி.மீ தூரத்தில் இருக்கும் என்றால் சுமாராக 2 கி.மீ இருக்கும்.

நிலையத்திலிருந்து அங்கு இரு சக்கர வாகனத்தில் செல்ல சுமார் 10 நிமிடங்கள் ஆகும். இந்த வழக்கில் புகார்தாரர் இப்படிப்பட்ட சம்பவங்களை குறிப்பிட்டு இப்படிப்பட்ட புகாரை கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எழுதாத வெள்ளைப் பேப்பரில் புகார்தாரரிடம் கையெழுத்துப் பெற்றுக் கொண்டு இந்த வழக்கில் யாராவது எதிரியை சேர்க்க வேண்டும் என்ற அழுத்தத்தின் காரணமாக இந்த எதிரி மீது குற்ற வழக்கு பதியப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது மேலதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.